"இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! நீங்கள் உங்களது நேரத்தை வீணாக்கக் கூடாது. உள்ளுக்குள் ஞான சிந்தனை செய்து கொண்டே இருப்பீர்களானால் தூக்கத்தை வென்றவர்களாக ஆகிவிடுவீர்கள், கொட்டாவி முதலியன வராது.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் பாபா மீது பலியாவது ஏன்? பலியாவதன் அர்த்தம் என்ன?

பதில்: பலியாவது என்றால் பாபாவின் நினைவில் மூழ்கி விடுதல். நினைவில் மூழ்கி விடும் போது ஆத்மா எனப்படுகின்ற பேட்டரி சார்ஜ் ஆகின்றது. விகர்மங்கள் வினாசமாகின்றன. வருமானம் சேமிப்பாகிக் கொண்டே போகின்றது.

ஓம் சாந்தி! ஆன்மீகத் தந்தை அமர்ந்து ஆன்மீகக் குழந்தைகளுக்குச் சொல்லிப் புரிய வைக்கிறார், இப்போது இங்கே நீங்கள் சரீரத்துடன் கூட அமர்ந்திருக்கிறீர்கள். மரண உலகத்தில் இது கடைசி சரீரம் என்பதை அறிவீர்கள். பிறகு என்னவாகும்? பிறகு பாபாவுடன் கூட சாந்திதாமத்தில் ஒன்று சேர்வோம். இந்த சரீரம் இருக்காது. பிறகு சொர்க்கத்திற்கு நம்பர்வார் புருஷார்த்தத்தின் அனுசாரம் வருவீர்கள். அனைவருமே ஒன்றாக வர மாட்டார்கள். இராஜதானி ஸ்தாபனையாகிக் கொண்டிருக்கிறது. பாபா எப்படி சாந்தியின், சுகத்தின் கடலாக இருக்கிறாரோ, அதுபோல் குழந்தை களையும் கூட சாந்தியின், சுகத்தின் கடலாக ஆக்கிக் கொண்டிருக்கிறார். பிறகு போய் சாந்தி தாமத்தில் அமர வேண்டும். ஆகவே பாபாவை, வீட்டை மற்றும் சுகதாமத்தை நினைவு செய்ய வேண்டும். இங்கே நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு இந்த மன நிலையில் அமர்கிறீர்களோ, அந்த அளவு பல பிறவிகளுக்கான பாவங்கள் பஸ்மமாகின்றன. இது யோக அக்னி என்று சொல்லப் படுகின்றது. சந்நியாசிகள் சர்வ சக்திவானிடம் யோகம் வைப்பதில்லை. அவர்கள் வசிக்கும் இடமாகிய பிரம்மத்திடம் யோகம் வைக்கின்றனர். அவர்கள் தத்துவ யோகிகள், பிரம்மம் அல்லது தத்துவத்திடம் யோகம் வைப்பவர்கள். இங்கே ஜீவாத்மாக்களின் விளையாட்டு நடைபெறுகின்றது. அங்கே இனிமையான வீட்டில் ஆத்மாக்கள் மட்டுமே இருக்கின்றனர். அந்த இனிய வீட்டிற்குச் செல்வதற்காக முழு உலகமும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சந்நியாசிகளும் சொல்கிறார் கள், நாங்கள் பிரம்மத்தில் ஐக்கியமாகி விட வேண்டும் என்று. நாங்கள் பிரம்மத்தில் போய் வசிக்க (நிவாசம்) வேண்டும் என்று அவர்கள் சொல்வதில்லை. இதையோ குழந்தைகளாகிய நீங்கள் இப்போது புரிந்து கொண்டு விட்டீர்கள். பக்தி மார்க்கத்தில் எவ்வளவு குழப்பமான விஷயங்களைக் கேட்டுக் கொண்டே இருக்கின்றனர்! இங்கோ பாபா வந்து இரண்டு சொற்களைச் சொல்லிப் புரிய வைக்கிறார் - எப்படி மந்திரம் ஜெபிக்கிறார்கள் இல்லையா, அதுபோல. சிலர் குருவை நினைவு செய்கிறார்கள். சிலர் யார்-யாரையோ நினைக்கிறார்கள் மாணவர்கள் ஆசிரியரை நினைக்கிறார்கள். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா மற்றும் வீடு மட்டுமே நினைவு இருக்கிறது. பாபாவிடமிருந்து நீங்கள் சாந்திதாம் மற்றும் சுகதாமத்தின் ஆஸ்தியை அடைகிறீர்கள். அது தான் மனதில் நினைவிருக்கிறது. வாயினால் எதுவும் பேசத் தேவையில்லை. புத்தி மூலம் நீங்கள் அறிந்து கொண்டிருக்கிறீர்கள், சாந்திதாமத்திற்குப் பிறகு சுகதாமம். நாம் முதலில்

முக்தியில், பிறகு ஜீவன் முக்தியில் செல்வோம். முக்தி-ஜீவன் முக்தி அளிப்பவர் ஒரே ஒரு பாபா. பாபா குழந்தை களுக்கு அடிக்கடி சொல்லிப் புரிய வைக்கிறார் -- நேரத்தை வீணாக்கக் கூடாது. பல பிறவிகளின் பாவச்சுமை தலையில் உள்ளது. இந்த பிறவியின் பாவங்கள் முதலியவை நினைவில் உள்ளன. சத்யுகத்தில் இந்த விஷயங்கள் இருப்பதில்லை. இங்கே பல பிறவிகளின் பாவங்களின் சுமை இருக்கிறது என்பதைக் குழந்தைகள் அறிவார்கள். நம்பர் ஒன்னாக இருப்பது காம விகாரத்தின் விகர்மம். அதை பல பிறவிகளாகச் செய்தே வந்திருக்கிறீர்கள். மேலும் பாபாவுக்கு நிந்தனையும் அதிகம் செய்திருக்கிறீர்கள். அனைவருக்கும் சத்கதி அளிப்பவர் பாபா, அவரை எவ்வளவு நிந்தனை செய்திருக்கிறீர்கள்! இவையனைத்தையும் கவனத்தில் வைக்க வேண்டும். இப்போது எவ்வளவு முடியுமோ, பாபாவை நினைப்பதற்காக முயற்சி செய்ய வேண்டும். உண்மையில் ஆகா! சத்குரு என்று சொல்லப் படுகின்றது, குருவும் கூட இல்லை. ஆகா! குரு என்பதற்கு அர்த்தம் எதுவும் இல்லை. ஆகா சத்குரு! முக்தி-ஜீவன் முக்தியை அவர் தாம் தருகிறார் இல்லையா? அந்த குருக்களோ அநேகர் உள்ளனர். இவர் ஒரே ஒரு சத்குரு. நீங்களோ அநேக குருமார்களைக் கொண்டவர்களாக இருந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு பிறவியிலும் 2-4 குருக்களைக் கொண்டிருக் கிறீர்கள். குரு வைத்துக் கொண்ட பின் வேறு-வேறு இடங்களுக்குச் செல்கின்றனர். இதைவிட நல்ல வழி கிடைக்கலாம் என்று வெவ்வேறு குருக்களிடம் சென்று சோதித்துப் பார்த்துக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் எதுவும் கிடைப்பதில்லை. இப்போது குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், இங்கேயே இருக்க வேண்டியதில்லை. அனைவரும் சாந்திதாம் செல்ல வேண்டும். பாபா உங்களது அழைப்பிற்கிணங்க வந்திருக்கிறார். உங்களுக்கு நினைவு படுத்துகின்றார் -- வாருங்கள், வந்து எங்களைப் தூய்மைபடுத்துங்கள் என்று நீங்கள் தான் என்னை அழைத்தீர்கள். சாந்திதாமமும் தூய்மையானது தான், சுகதாமமும் தூய்மையானது தான். எங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று சொல்லி அழைக்கிறார்கள். வீடு அனைவருக்கும் நினைவிருக் கிறது. ஆத்மா உடனே சொல்லும், எனது வீடு சாந்திதாம் என்று. பரமபிதா பரமாத்மா பரந்தாமத்தில் வசிக்கின்றார். நாமும் கூடப் பரந்தாமத்தில் வசிக்கின்றோம்.

இப்போது பாபா சொல்லிப் புரிய வைத்துள்ளார், உங்கள் மீது பிரகஸ்பதியின் தசா (பார்வை) அமர்ந்துள்ளது. இது எல்லையற்ற விஷயம். எல்லையற்ற தசா அனைவர் மீதும் அமர்ந்துள்ளது. சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. நாம் தான் சுகத்திலிருந்து துக்கம், பிறகு துக்கத்திலிருந்து சுகத்திற்கு வருகின்றோம். சாந்திதாம், சுகதாமம், பிறகு இந்த துக்கதாமம். இதையும் குழந்தை களாகிய நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், மனிதர்களின் புத்தியிலோ அமர்வதில்லை. இப்போது பாபா உயிருடன் இருந்து கொண்டே இறந்து விடக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறார். விட்டில் பூச்சிகள் விளக்கில் பலியாகி விடுகின்றன. சில அதன் மீது ஆசை கொண்டு எரிந்து போகின்றன, பலியாகி விடுகின்றன. இன்னும் சில சுற்றி வந்தபின் போய்விடுகின்றன. இவரும் பேட்டரி இல்லையா? அனைவருடைய புத்தியோகம் அந்த ஒருவரிடம் உள்ளது. நிராகார் பாபாவிடம் பேட்டரி இணைந்துள்ளது. இந்த ஆத்மாவுக்கோ (பிரம்மாவுக்கு) மிகவும் அருகில் உள்ளது என்றால் மிகவும் சகஜமாகி விடுகின்றது. பாபாவை நினைவு செய்வதன் மூலம் உங்களது பேட்டரி சார்ஜ் ஆகிக் கொண்டே இருக்கின்றது. குழந்தைகளாகிய உங்களுக்குக் கொஞ்சம் கஷ்டம். இவருக்கு (பிரம்மா) சுலபம்.

இருந்தாலும் இவர் புருஷார்த்தம் செய்தாக வேண்டும் - நீங்கள் எவ்வளவு செய்ய வேண்டியுள்ளதோ அந்த அளவுக்கு. இவர் எவ்வளவு அருகில் இருக்கிறாரோ, அந்த அளவு அதிகமான சுமையும் உள்ளது. பாடலும் உள்ளது, யாருக்குத் தலைமேல் விவகாரம் - இவருக்கு அதிகமாகவே விவகாரங்கள் உள்ளன இல்லையா? (சிவ) பாபா சம்பூர்ணமானவர். இவர் (பிரம்மா) சம்பூர்ணம் ஆகவேண்டும். இவர் அனைத்தையும் பார்க்க வேண்டியுள்ளது. இருவரும் இணைந்தே இருக்கின்றார்கள். இருந்தாலும் சிந்தனை இருக்கத் தானே செய்கிறது? பெண் குழந்தைகளுக்கு எவ்வளவு அடி விழுகிறது! அதனால் துக்கம் ஏற்படுகிறது. கர்மாதீத் அவஸ்தா கடைசியில் தான் ஏற்படும். அதுவரை சிந்தனை இருக்கும். பெண் குழந்தைகளிடமிருந்து கடிதம் வரவில்லை என்றால் எண்ணத் தோன்றுகிறது - ஒரு வேளை நோய்வாய்ப் படவில்லையே என்று.. சேவை பற்றிய செய்தி வந்தால் பாபா நிச்சயமாக அவர்களை நினைவு செய்வார். பாபா இந்த (பிரம்மாவின்) உடல் மூலம் சேவை செய்கின்றார். எப்போதாவது முரளி கொஞ்சம் நடைபெறு கிறது, அல்லது 2-4 நாட்கள் முரளி வரவே இல்லை என்றாலும் கூட உங்களிடம் கருத்துகள் உள்ளன. நீங்களும் உங்களது டயரியைப் பார்க்க வேண்டும். பேட்ஜை வைத்தும் கூட நீங்கள் நல்லபடியாக சொல்லிப் புரிய வைக்க முடியும். ஆதி சனாதன தேவி-தேவதா தர்மம் எப்போது இருந்ததோ அப்போது வேறு எந்த தர்மமும் இல்லை. கல்ப விருட்சமும் கூட அவசியம் உடன் இருக்க வேண்டும். விதவிதமான தர்மங்களைப் பற்றிய இரகசியத்தைச் சொல்லிப் புரிய வைக்க வேண்டியுள்ளது. முதல்-முதலில் ஓர் அத்வைத (பிரிவினை இல்லாத) தர்மம் மட்டுமே இருந்தது. உலகத்தில் சாந்தி, சுகம், தூய்மை இருந்தது. பாபாவிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கின்றது. ஏனென்றால் பாபா சாந்தியின் கடல், சுகத்தின் கடல் இல்லையா? இதற்கு முன் நீங்களும் எதுவும் தெரியாதிருந்தீர்கள். இப்போது எப்படி பாபாவின் புத்தியில் இவை அனைத்தும் உள்ளனவோ அதுபோல் நீங்களும் ஆகிறீர்கள். சுகத்தின் கடல், சாந்தியின் கடலாக நீங்களும் ஆகிறீர்கள். தன்னுடைய அன்றாடக் கணக்கு-வழக்கைப் பார்க்க வேண்டும் -- எந்த விஷயத்தில் குறை உள்ளது? நான் உண்மையிலேயே அன்பின் கடலாக இருக்கிறேனா? யார் மீதாவது கோபப்படுகிற மாதிரி என்னிடம் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லாதிருக்கிறதா? தன் மீது பார்வை வைக்க வேண்டும். பாபா ஆசீர்வாதம் செய்தால் நீங்கள் இது போல் ஆகி விடுவீர்கள் என்றெல்லாம் நினைக்கக் கூடாது. பாபா சொல்கிறார், நான் டிராமாவின் அனுசாரம் என்னுடைய சமயத்தில் வந்திருக்கிறேன். இது என்னுடைய கல்ப-கல்பத்தின் செயல்முறைத் திட்டமாகும். இந்த ஞானத்தை வேறு யாரும் தர முடியாது. சத்யமான தந்தை, சத்யமான ஆசிரியர், சத்குரு ஒருவர் மட்டுமே! இதுவும் உறுதியாக இருந்தால் வெற்றி உங்களுடையதாகும். இவ்வளவு அநேக தர்மங்கள் அனைத்துமே வினாசமாகியே தீர வேண்டும். எப்போது சத்யுக சூரியவம்சி குலம் இருந்ததோ அப்போது வேறு எந்த ஒரு குலமும் இல்லை. மீண்டும் இதுபோலவே ஆகும். நாள் முழுவதும் இதுபோலவே தனக்குத் தான் பேசிக் கொண்டே இருங்கள். ஞானத்தின் பாயின்ட்டுகள் உள்ளுக்குள் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். குஷி இருந்து கொண்டே இருக்க வேண்டும். பாபாவிடம் ஞானம் உள்ளது. அது இப்போது உங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதை தாரணை செய்ய வேண்டும். இதில் நேரத்தை வீணாக்கக் கூடாது. இரவிலும் கூட நேரம் கிடைக்கும். பார்க்கிறீர்கள், ஆத்மா உடல் உறுப்புகள் மூலம் காரியம் செய்து-செய்தே களைத்துப் போய் பிறகு

தூங்கி விடுகிறது. பாபா உங்களுடைய பக்தி மார்க்கத்தின் அனைத்துக் களைப்பையும் போக்கிக் களைப்பற்றவர்களாக ஆக்கி விடுகின்றார். எப்படி இரவில் ஆத்மா களைத்துப்போனால் சரீரத்திலிருந்து தனியாகி விடுகின்றது, அது தூக்கம் எனப்படுகின்றது. தூங்குவது யார்? ஆத்மாவுடன் கூடவே கர்மேந்திரியங்களும் தூங்கி விடுகின்றன. ஆகவே இரவில் தூங்கும் நேரத்திலும் கூட பாபாவை நினைவு செய்து இதுபோலெல்லாம் சிந்தனை செய்து தூங்கிப் போக வேண்டும். கடைசி நேரத்தில் இரவும் பகலும் நீங்கள் தூக்கத்தை வென்றவர்களாக ஆக முடியும். பிறகு நினைவிலேயே இருப்பீர்கள். மிகுந்த குஷி இருக்கும். 84 பிறவிகளின் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டே இருப்பீர்கள். கொட்டாவி அல்லது தூங்கி விழுதல் முதலியன இருக்காது. ஹே! தூக்கத்தை வெல்லக் கூடிய குழந்தைகளே, வருமானத்தின் சமயத்தில் ஒருபோதும் தூங்கக் கூடாது. எப்போது ஞானத்தின் போதையில் மூழ்கி விடுகிறீர்களோ அப்போது உங்களது மன நிலை அதுபோல் இருக்கும். இங்கே நீங்கள் கொஞ்ச நேரம் அமர்கிறீர்கள் என்றால் ஒருபோதும் கொட்டாவி அல்லது தூங்கி விழுதலில் வரக் கூடாது. மற்ற பக்கம் கவனம் செல்வதால் பிறகு கொட்டாவி வரும்.

குழந்தைகளாகிய நீங்கள் இதையும் கவனத்தில் வைக்க வேண்டும் - நாம் மற்றவர்களையும் கூட நம்மைப்போல் ஆக்க வேண்டும். பிரஜைகளோ வேண்டும் தானே? இல்லையென்றால் எப்படி ராஜா ஆவீர்கள்? கொடுப்பதால் செல்வம் குறையாது மற்றவர்களுக்கு சொல்லிப் புரிய வைக்கிறீர்கள், தானம் கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் அது ஒருபோதும் குறையாது. இல்லை யென்றால் சேமிப்பாகாது. மனிதர்களோ மிகவும் கஞ்சத்தன முள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். செல்வத்திற்காக மிகுந்த சண்டை-சச்சரவுகளும் ஆகிவிடுகின்றது. இங்கே பாபா சொல்கிறார், நான் இந்த அழியாத செல்வத்தை அளிக்கிறேன் என்றால் நீங்களும் பிறகு மற்றவர் களுக்குக் கொடுத்துக் கொண்டே இருங்கள். இதில் சிக்கனம் கூடாது. தானம் கொடுக்கவில்லை என்றால் தன்னிடம் இல்லை என்று பொருள். இந்த வருமானம் அப்படிப்பட்டது, இதில் சண்டை முதலிய வற்றின் விஷயம் கிடையாது. இது குப்தமானது என்று சொல்லப்படுகின்றது. நீங்கள் குப்தமான (மறைமுகமான) போர்வீரர்கள். 5 விகாரங்களோடு நீங்கள் போராடுகிறீர்கள். நீங்கள் வெளிப்படை யாகத் தெரியாத போர்வீரர்கள் என்று சொல்லப் படுகிறீர்கள். காலாட் படையினர் அதிகம் பேர் இருப்பார்கள். இங்கும் அதுபோல் உள்ளனர். பிரஜைகள் அதிகம் பேர் உள்ளனர். மற்றப்படி கேப்டன், மேஜர் முதலிய அனைவரும் உள்ளனர். நீங்கள் சேனையாக இருக்கிறீர்கள். அதிலும் நம்பர்வார் இருக்கிறீர்கள். பாபா புரிந்து கொள்வார், இவர் கமாண்டர், இவர் மேஜர் என்று. மகாரதி, குதிரைப்படையினர் இருக்கிறார்கள் இல்லையா? இதையோ பாபா அறிவார், மூன்று விதமான புரிய வைப்பவர்கள் உள்ளனர். நீங்கள் அவினாசி ஞானரத்தினங்களின் வியாபாரம் செய்கிறீர்கள். எப்படி அவர்களும் வியாபாரம் கற்றுத் தருகிறார்கள், குரு போய்விட்டால் அவருக்குப் பின்னால் சீடர்களும் போய்விடுகிறார்கள் இல்லையா? அது ஸ்தூலமானது. இது சூட்சுமமானது. அநேக விதமான தர்மங்கள் உள்ளன. ஒவ்வொருவருக்கும் அவரவர் தம் வழிமுறை உள்ளது. நீங்களும் கூடப் போய் அவர்கள் சொல்வதைக் கேட்கலாம் -- அவர்கள் என்ன கற்றுத் தருகிறார்கள், என்னென்ன சொல்கிறார்கள் என்று. பாபாவோ உங்களுக்கு 84 பிறவிகளின் சக்கரத்தின்

கதையைச் சொல்லிப் புரிய வைக்கிறார். குழந்தைகளாகிய உங்களுக்குத் தான் பாபா வந்து ஆஸ்தி தருகிறார், இது டிராமாவில் விதிக்கப்பட்டுள்ளது. இப்போது கலியுக முடிவு வரை இந்த ஆத்மாக்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். எதுவரை பாபா இங்கே இருக்கிறாரோ, எண்ணிக்கை கூடிக் கொண்டே இருக்கிறது. பிறகு இவர்கள் அனைவரும் எங்கே வசிப்பார்கள்? எங்கே சாப்பிடுவார்கள்? எல்லாக் கணக்கையும் வைக்க வேண்டி யுள்ளது இல்லையா? அங்கோ இவ்வளவு மனிதர்கள் இருக்க மாட்டார்கள். சாப்பிடுபவர்களே கொஞ்சம் பேர். அனைவருக்கும் அவரவர் வயல்கள் இருக்கும். தானியத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வார்கள்? அங்கே மழை முதலியவற்றிற்காக யாகம் முதலியவை செய்ய வேண்டியிருக்காது - இங்கே செய்ய வேண்டியிருப்பதைப் போல். இப்போது பாபா யக்ஞத்தைப் படைத்திருக்கிறார். பழைய சிருஷ்டி முழுவதும் யக்ஞத்தில் ஸ்வாகா ஆகிவிடும். இது எல்லையற்ற யக்ஞம். அவர்கள் எல்லைக்குட்பட்ட யாகத்தை மழைக்காக அமைக்கிறார்கள். மழை வந்தால் குஷியாகி விடுகிறார்கள் - யக்ஞம் வெற்றி பெற்றது என்று. மழை இல்லை என்றால் தானியம் இருக்காது, பஞ்சம் வந்து விடுகிறது. யக்ஞம் முதலியவற்றைப் படைக்கிறார்கள், ஆனால் மழை வரவில்லை என்றால் என்ன செய்ய முடியும்? ஆபத்துகளோ அனைத்தும் வரத்தான் செய்யும். ஏவுகணைகளின் மழை, நில நடுக்கம் போன்றவை எல்லாம் நிகழத் தான் செய்யும். டிராமாவின் சக்கரத்தையோ குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொண்டிருக் கிறீர்கள். இந்தச் சக்கரமும் கூட மிகப் பெரியதாக இருக்க வேண்டும். விளம்பரங்கள் பெரிய-பெரிய இடங்களில் வைக்கப்படுமானால் பெரிய-பெரிய மனிதர்கள் படிப்பார்கள். இப்போது நிச்சயமாகப் புருஷோத்தம சங்கமயுகம் தான் என்பதைப் புரிந்து கொள்வார்கள். கலியுகத்தில் அதிகமான எண்ணிக்கையில் மனிதர்கள் உள்ளனர். சத்யுகத்தில் குறைவான எண்ணிக்கையிலேயே மனிதர்கள் இருப்பார்கள். ஆக, இவ்வளவு மனிதர்கள் அனைவரும் அழிந்து போவார்கள். சிவஜெயந்தி என்றாலே சொர்க்க ஜெயந்தி, லட்சுமி-நாராயண் ஜெயந்தி. விஷயம் மிகவும் சுலப மானது. சிவஜெயந்தி கொண்டாடப்படுகின்றது. அவர் எல்லையற்ற தந்தை. அவர் தான் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்திருந்தார். நேற்றைய விஷயம் இது - நீங்கள் சொர்க்கவாசியாக இருந்தீர்கள். இதுவோ மிகவும் சுலபமான விஷயம். குழந்தைகள் நல்லபடியாகப் புரிந்து கொண்டு, மற்றவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். குஷியிலும் இருக்க வேண்டும். இப்போது நாம் என்றும் நோய்களிலிருந்து விடுபட்டு நூறு சதவிகிதம் ஆரோக்கியமானவர்களாக, செல்வம் நிறைந்தவர்களாக ஆகிறோம். இன்னும் கொஞ்ச நேரமே மிச்சமுள்ளது. எவ்வளவு தான் துக்கம், மரணம் நிகழ்ந்தாலும் நீங்கள் அச்சமயம் மிகுந்த குஷியில் இருப்பீர்கள். நீங்கள் அறிவீர்கள், மரணம் வந்தே ஆக வேண்டும். இது கல்ப-கல்பத்தின் விளையாட்டாகும். கவலை எதுவும் ஏற்படுவதில்லை. யார் உறுதியாக இருக்கிறார்களோ, அவர்கள் ஐயோ-ஐயோ எனக் கூக்குரலிட மாட்டார்கள். மனிதர்கள் யாராவது ஒருவருடைய ஆப்பரேஷன் முதலியவற்றைப் பார்ப்பார் களானால் அவர்களுக்குத் தலைசுற்றல் வந்து விடுகின்றது. இப்போதோ எவ்வளவு பெரிய மரணம் ஏற்படப் போகிறது! குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், இவையனைத்தும் நடந்தாக வேண்டும். பாடலும் உள்ளது - வேட்டையாடப்படும் மிருகம் இறந்தால் வேட்டைக் காரனுக்குக் கொண்டாட்டம் இப்பழைய உலகத்திலோ அதிக துக்கத்தை அடைந்தாயிற்று.

இப்போது புதிய உலகத்திற்குச் செல்ல வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பாபாவிடமிருந்து அழிவற்ற ஞானரத்தினங்களைப் பெற்று மற்றவர்களுக்கு தானம் செய்ய வேண்டும். ஞானதானம் செய்வதில் கஞ்சத்தனம் கூடாது. ஞானத்தின் பாயின்ட்டுகள் (கருத்துகள்) உள்ளுக்குள் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். இராஜா ஆவதற்காகப் பிரஜைகளை அவசியம் உருவாக்க வேண்டும்.

2. தன்னுடைய அன்றாடக் கணக்கு-வழக்கைப் பார்க்க வேண்டும் -- (அ) நான் பாபா சமமாக அன்புக் கடலாக ஆகியிருக்கிறேனா? (ஆ) ஒருபோதும் யார் மீதும் கோபப் படாமல் இருக்கிறேனா? (இ) எனது நடத்தை மீது முழு கவனம் உள்ளதா?

வரதானம் : ஞானத்தின் கூடவே குணங்களை வெளிப்படுத்தி அனைத்து விதமான குணங்களில் நிறைந்தவராகி, குணத்தின் மூர்த்தி ஆகுக

அனைவரிடம் அதிகமாக ஞானம் உள்ளது. ஆனால் தற்போது குணங்களை வெளிப்படுத்தக்கூடிய அவசியம் உள்ளது. எனவே விசேஷ கர்மத்தின் மூலமாக குணத்தின் வள்ளல் ஆகுங்கள். நான் எப்போதும் குண மூர்த்தியாகி, அனைவரையும் குணத்தின் மூர்த்தி ஆக்குவதற்கான காரியத்தில் ஈடுபட்டு இருக்க வேண்டும் என்ற எண்ணம் வைக்க வேண்டும். வினானதை பாôப்பதற்கு, கேட்பதற்கு, செய்வதற்கு நேரம் இருக்காது. இந்த விதியினால் தன்னுடைய மற்றும் மற்றவர் களுடைய பலவீனங்கள் சுலபமாக சமாப்தியாகி விடும். எனவே இதில் ஒவ்வொருவரும் தன்னை நிமித்தம் என முத-ல் புரிந்து அனைத்து குணங்களிலும் நிறைந்து மற்றவர்களையும் மாற்றுவதற் கான உதாரணம் ஆகுங்கள்.

சுலோகன்: மனதின் மூலமாக யோக தானம், வார்த்தையின் மூலமாக ஞான தானம் மற்றும் கர்மத்தின் மூலமாக குணத்தையும் தானம் செய்யுங்கள்.